**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**<u>ந.க.எண். 3490/ஆ5/2023, நாள். 21.08.2023</u>**

பொருள் பள்ளிக் கல்வி – மாற்றுத்திறன் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையினை இருமடங்காக உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது – இது சார்பாக பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் மாணவர்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் இடம்பெற செய்தல் – தொடர்பாக

பார்வை

1. அரசாணை (நிலை) எண். 64, மாற்றத்திறனாளிகள் நல (மாதிந.2–1) துறை நாள். 10.07.2013
2. அரசாணை (நிலை) எண். 16, மாற்றத்திறனாளிகள் நல (மாதிந–2–) துறை நாள். 04.07.2023
3. சென்னை.6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 049832/எம்/இ4/2023, நாள். 12.08.2023

•••••

பார்வை 3–ல் காணும் செயல்முறைகள் மற்றும் அரசாணையின் படி மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு 2013–2014 ஆம் நிதியாண்டு முதல் 1ஆம் வகுப்பு முதல் உயர்கல்வி வரை பயிலும் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு அவர்கள் பயிலும் வகுப்பிற்கு ஏற்றவாறு கல்வி உதவித்தொகை குறைந்தபட்சம் ரூ.1000/– முதல் ரூ.7000/– வரை வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் 2023–2024 ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **"மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி வழங்கப்படும்"** என்று வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மாற்றுத்திறன் மாணாக்கர்களின் சிறப்பு கல்வியினை ஊக்குவித்திட ஏதுவாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் தற்போது வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையினை 2023–2024 ஆம் ஆண்டு முதல் இருமடங்காக உயர்த்தி கீழ்கண்டவாறு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

| **வ. எண்.** | **வகுப்பு** | **கல்வி உதவித் தொகை** | |
|---|---|---|---|
| | | **ஏற்கனவே வழங்கப்படும் வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்)** | **தற்போது இரட்டிப்பாக்கி வழங்கப்பட்டுள்ள வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்)** |
| 1 | 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை | 1,000/– | 2,000/– |
| 2 | 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | 3,000/– | 6,000/– |
| 3 | 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை | 4,000/– | 8,000/– |
| 4 | பட்டப் படிப்பு | 6,000/– | 12,000/– |
| 5 | தொழிற்கல்வி மற்றும் முதுகலை பட்டம் | 7,000/– | 14,000/– |

பார்வை 2-ல் காணும் அரசாணைப்படி மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களின் கல்வி அறிவை மேம்படுத்தும் வகையில் வாசிப்பாளர் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்டுள்ளவாறு உதவித்தொகை வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.

| **வாசிப்பாளர் உதவித் தொகை** | | |
|---|---|---|
| வ. எண். | வகுப்பு | தொகை (ரூ.) |
| 1 | 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை | 3,000/- |
| 2 | இளங்கலை பட்டம் | 5,000/- |
| 3 | தொழிற்கல்வி மற்றும் முதுகலை பட்டம் | 6,000/- |

எனவே, மேற்கண்ட கோரிக்கையின் அடிப்படையில் , சிறப்புக்கல்வி பெறும் மாற்றுத்திறனாளி மாணவர்களின் கல்வி நிலை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகை மற்றும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகையினை அனைத்து பள்ளி களில் பயிலும் மாற்றுத்திறன் மாணவர்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் இவ்வுதவித்தொகை குறித்த விவரங்களை இடம்பெற செய்திடுமாறும், மேலும், இவ்வுதவித்தொகை விண்ணப்பங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலங்களில் பெற்று அனைத்து பள்ளி களில் பயிலும் மாற்றுத்திறன் மாணவர்கள் எவரும் விடுபடாமல் இவ்வுதவித்தொகையினை பெற்று உரிய பயனாளிகளுக்கு வழங்கிடும்பொருட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு - அரசாணைகள் நகல்

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்-

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)